முருகப்பெருமான் துணை
அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

## குரோதி வருடம் சித்திரை மாதம் 01 திகதி முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் 08 திகதி வரை (14.04.2024 ஞாயிறு முதல் 21.04.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தரும வடிவான அரங்கனே
   தயவை விதைத்து மக்களின்
   கருமவினை போக்கிக் காத்தருள
   கருணை வடிவாக வந்த ஞானியே
2. ஞானியே உன்பெருமை கூறி
   ஞாலமதில் அகத்திய மகரிஷியும்
   இனிமைபட அரங்கன்நீ கேட்க
   இந்தியா தமிழகத்தின் வருங்கால
3. வருங்கால நிகழ்வாக குரோதி தகர்திங்கள்
   வல்லமையான ஏகதிகதிமேல் அட்டம திகதிவரை
   வருங்காலப் பலனாக வார ஆசி
   வழங்குவேன் மக்களின் நலம் வேண்டி
4. வேண்டிட அக்கினி மிகுந்து
   வினவிட இந்தியா தமிழகத்தில்
   உண்டாகும் பிணி சோடையிடர்
   உலகம் வியக்க நீர்வளம் குன்றும்
5. குன்றவே ஆனாலும் தருமபலம்
   குருவரங்கன் சேவையால் பெருக
   நன்றாக இடையிடை மழைவளம்
   நல்கியே பாதுகாப்பாய் மாறும்

6. மாறுதலை தருவேன் எனவந்த
மன்னர்களும் தண்ணீர் பந்தல்
ஆறுதலாய் நீர்மோர் பானகமென
ஆங்காங்கே தருமசேவை புரியவே
7. புரியவே இயற்கையும் குளிர்ந்து
புகலுவேன் மாரியாக இறங்க நேரும்
தெரியவே தேர்தல்களம் காணும்
தேர்விலும் குறுக்கு வழி தேடும்
8. தேடும் அவலம் பலவெளிப்பட்டு
தெரிவிப்பேன் கையூட்டு களவென
நாடெங்கிலும் வஞ்சகச் செயல்கள்
நாலா வகை அணுகி மக்களிடை
9. மக்களிடை கழகங்கள் எல்லாம்
மதிப்பிழக்க நேரும் என்பேன்
ஆக்கமுடன் இனியேனும் மக்களிடை
ஆதரவு பெருகும்படி நெடுங்காலம்
10.நெடுங்காலம் பயன்தரும் திட்டங்களை
நிலமதனில் செய்து ஆதரவு திரட்ட
இடரின்றி வரும் ஆளுமையும்
இலகுவாய் இந்தியா தமிழகம் மேம்பட வழிவகுக்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

குரோதி வருடம் சித்திரை மாதம் முதல் நாள் **14.04.2024** ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் **08**ம் நாள் **21.04.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

தருமமே வடிவான ஆறுமுக அரங்க மகானே! உலக மக்களின் எண்ணங்களிலே தயவினை விதைத்து மக்களிடையே தருமத்தை பெருக்கி அதன் மூலமாக அவர்கள் செய்திட்ட முன் ஜென்ம பாவங்களான கர்மவினைகளை போக்கி அவர்களை காத்து இரட்சித்து கடைத்தேற்றிடவே முற்றுப்பெற்றும் தாம் மக்களுக்காக மக்கள் மீது கருணை கொண்டு

இவ்வுலகினில் வந்துதித்த ஞானியே அரங்க மகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே அரங்கா இவ்வுலகினில் வருங்காலம் குறித்து தாம் அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க அகத்திய மகரிஷி யானும் குரோதி வருடம் சித்திரை மாதம் முதல் நாள் **14.04.2024** ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் **08**ம் நாள் **21.04.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இனிவரும் நாட்களிலே நாட்டினில் வெப்பம் மிகுதியாகி வெப்ப சம்பந்தமான நோய்கள் மக்களிடம் உண்டாகும். வெப்ப சலன அதிகரிப்பால் தண்ணீர் பற்றாக்குறையும் உண்டாகும். ஆனாலும் உலக நலன் கருதி அரங்கமகான் வேண்டுதல் வைப்பதாலும், தரும பலம் பெருக்குவதாலும் இடையிடையே மழை பெய்து மக்களுக்கு பாதுகாப்பாய் மாறுமப்பா.

மேலும் பொறுப்பில் உள்ள ஆட்சியரும் அதிகாரிகளும் தண்ணீர் பந்தல், நீர் மோர் தருதல், பானகம் தருதல் என மக்களுக்கு சேவைகள் செய்திட்டால் தருமபலம் மேன்மேலும் அதிகமாகி இயற்கையும் குளிர்ந்து அதிகமாக மழை பெய்து தண்ணீர் பற்றாக்குறை தீர்ந்திட வாய்ப்பு உள்ளதப்பா.

தேர்தல் களத்திலே வெற்றி பெற குறுக்கு வழிகளை தேடிடும் கட்சிகளின், நபர்களின் அவலங்கள் பல வகையிலும் மக்கள் அறிய வெளிப்படும் லஞ்சம் கொடுத்தல், பொது சொத்தை அபகரித்தல் என சிலர் செய்த செயல்கள் எல்லாம் வெளிப்பட்டு அவர்கள் மக்களிடை மதிப்பினை இழக்க நேருமப்பா.

ஆதலினாலே மக்களை கவரும் விதமாக வஞ்சிக்காமல் உண்மையிலேயே மக்களுக்கு பயன் தரும் வகையிலே உருவாக்கி மக்களின் ஆதரவினை பெற்றால் வருகின்ற ஆட்சியானது உறுதியான வல்லமையான மக்களுக்கான ஆட்சியாக அமைந்து இந்தியா தமிழகம் மேம்பட வழிவகை செய்யுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–